அவர்களும் நானும் சென்று கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு தாரங்கம்பாடி என்கின்ற மீனவ கிராமத்தில் கட்டப்பட்டிருந்த வீடுகளைத் திறந்து வைத்தோம். அந்த வகையிலே, இன்றைக்குத் தொடர்ந்து வீடுகள் கட்டுகின்ற பணி தமிழ்நாடு கடற்கரை முழுவதும் நடந்துகொண்டிருக்கின்றது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 110 கோடி ரூபாய் பொருட்கள் நம்முடைய முதல்வர் அவர்களுடைய திருக்கரங்களால் கடந்த வாரத்தில் வழங்கப்பட்டு, வருகின்ற 28 ஆம் தேதியிலேயிருந்து தமிழகம் எங்கும் வழங்கப்படவிருக்கிறது என்பதனை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) அதேபோல, நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த பூம்புகார் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கான அந்தப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வு முடிந்தவுடன், உடனடியாக அந்தப் பணி நடைமுறைக்கு வரும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுகத்தினுடைய பணியை விரைந்து முடிக்க உறுதிமொழி அளித்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30—

கட்டடம்

***35119—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2007 அக்டோபர் 22]

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாக அடிமனை இல்லாததால் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தாரமங்கலம் தொகுதி, அமரகுந்திப் பகுதியில் இருக்கக்கூடிய E.D. 47 பால் உற்பத்தியாளர் சங்கம் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பால் சொசைட்டிக்கு இன்னும் கட்டடம் இல்லை. இதுவரை அந்தச் சங்கத்தில் 200 லிட்டர் பால் வந்தும், நான் பல முறை இந்தச் சபையில் இந்தக் கட்டடம் கட்டுவதற்குக் கேட்டும், இன்னும் அதைக் கொடுக்காத நிலை உள்ளது. இந்தப் பால் உற்பத்தியாளர் சங்கத்தில் வருடத்திற்கு 50,000 ரூபாய் இலாபம் வந்தும் இன்னும் கட்டிக் கொடுக்காத நிலை உள்ளது. இந்த நிலையில், நாங்கள் அந்த நிலத்தை வாங்கிக் கொடுத்தால், உடனடியாக இந்தத் துறை அமைச்சர் அவர்கள் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் உள்ள E.D. 47 அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 31-10-1985 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1–11–1985 முதல் பணி தொடங்கப்பட்டு நாளது தேதியில் 946 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது இச்சங்கத்தில் 41 உறுப்பினர்கள் பால் ஊற்றி வருகிறார்கள் நாள் ஒன்றுக்கு சராசரியாக 191 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதும் இல்லை. மேலும் 2005–2006–ன் தணிக்கையின்படி ரூ.34,501.93 பைசா குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, தாரமங்கலம்

தொகுதி, அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு தற்போது வாய்ப்பு இல்லாவிட்டாலும்கூட, அதற்கான நிலத்தினை நமது சட்டமன்ற உறுப்பினர் மூலமாக வாங்கிக் கொடுத்தால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து கட்டினால் அதற்குச் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களமூலமாக அறிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) காயத்ரி தேவி, (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். திரு. பெ. கண்ணன்.*

திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். எங்கள் பகுதியில் பல இடங்கள் இதுபோல் இருக்கின்றன. அனைத்துக்கும் எங்களுடைய நிதியிலிருந்தே கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், எங்களுக்கு இன்னும் ஒரு கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்தால் நாங்களே இப்படிப்பட்ட இடங்களையெல்லாம் தேர்வு செய்து கொடுத்துவிடுகிறோம். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.*

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் பாலகங்களில் விற்கப்படும் பால், நெய் போன்ற பொருட்களின் விலை திடீர் என்று 70 விழுக்காடு கூடியிருக்கிறது. இந்த விலையைக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலில் இருந்து தயாரிக்கப்படும் உப பொருட்களான பால்கோவா மற்றும் இதர பொருட்கள் எல்லாம் மற்ற

2007 அக்டோபர் 22]

கம்பெனிகளுடைய விலையைவிடக் குறைவாகத்தான் விற்கப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால், மற்ற கம்பெனிகளில் இருக்கக்கூடிய தரத்தைவிட உயர்ந்த தரத்தில் இந்தப் பொருட்கள் இருக்கின்றன. இப்போதுள்ள காலச் சூழ்நிலைக்கேற்ப விலையேற்றம் அதிகமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் 70 சதவிகிதம் உயர்த்தப்படவில்லை. மற்ற கம்பெனிகளைவிட குறைவான விலையிலேயே விற்கப்படுகின்றன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு).

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Agenda-வில் கொடுத்தது பின்னர் எடுக்கப்படும். முதலில் சிறப்பு நேர்வாக...(குறுக்கீடு) என்ன சொல்கிறீர்கள்? என்ன விஷயம்?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விடுதலைப் புலிகளுக்கு இங்கிருந்து சில ஆயுதங்கள் கடத்தப்படுவதாக வந்திருக்கக்கூடிய செய்தியைப் பற்றியும், அதனால் கைது செய்யப்பட்ட நபர் குறித்தும் நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். அதை இப்போது எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்புறம் சொல்லுங்கள். உட்காருங்கள். அடுத்தது.